வெள்ளிக்கிழமை (ஜுமுஆ குத்பா) பிரசங்கம்

# நன்றியுணர்வு எனும் வழிபாடு

தேதி: 24 ஸஃபர் 1448 ஹிஜ்ரி / 7 ஆகஸ்ட் 2026 கி.பி.

நிச்சயமாக அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனை நாம் போற்றுகிறோம்; அவனிடமே உதவியும் பாவமன்னிப்பும் தேடுகிறோம். நமது உள்ளங்களின் தீமைகளிலிருந்தும், நமது தீய செயல்களிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம். அல்லாஹ் எவருக்கு வழிகாட்டுகிறானோ அவரை வழிகெடுப்பவர் எவருமில்லை; எவரை வழிகேட்டில் விடுகிறானோ அவருக்கு வழிகாட்டுபவர் எவருமில்லை. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; அவன் தனித்தவன், அவனுக்கு இணை யாருமில்லை என்று நான் சாட்சியமளிக்கிறேன். மேலும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவர். அவர்கள் படைப்பினங்களில் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் அவனது நேசருமாவார். அவர் அமானிதத்தை நிறைவேற்றினார், தூதுத்துவத்தை எடுத்துரைத்தார், அல்லாஹ்வுக்காகப் போராட வேண்டிய முறைப்படி போராடினார், இறுதியில் அவருக்கு மரணம் வந்தது. அல்லாஹு தஆலா அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் அவரது தோழர்களுக்கும் அதிகமான சாந்தியும் சமாதானமும் பொழிவானாக!

{يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ}

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், நீங்கள் முஸ்லிம்களாகத் தவிர மரணிக்காதீர்கள். [அல் குர்ஆன் ஆல் இம்ரான் 3 : 102].

**இறைத்துதிக்கு பின்பு :**

நிச்சயமாகச் செய்திகளில் மிகவும் உண்மையானது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகாட்டல்களில் மிகச் சிறந்தது முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டலாகும். காரியங்களில் மிகவும் கெட்டது (மார்க்கத்தில்) புதிதாக உருவாக்கப்பட்டவையாகும். புதிதாக உருவாக்கப்பட்டவை ஒவ்வொன்றும் பித்அத் ஆகும். பித்அத்கள் ஒவ்வொன்றும் வழிகேடாகும். வழிகேடுகள் ஒவ்வொன்றும் நரகத்திற்குரியதாகும்.

**அல்லாஹ்வின் அடியார்களே!**

நிச்சயமாக வணக்கத்தின் மிக உயர்ந்த நிலைகளில் ஒன்று நன்றியுணர்வு (ஷுக்ரு) எனும் நிலையாகும். அது ஒரு மகத்தான வழிபாடு மற்றும் சிறந்த நற்பண்பாகும். அல்லாஹ் தன் அடியார்களில் நன்றியுள்ளவர்களைப் புகழ்ந்துள்ளான்; தன் படைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அந்தப்

பண்பைக் கொண்டு வர்ணித்தும் உள்ளான். நபி நூஹ் (அலை) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

{إِنَّهُ كَانَ عَبْدًا شَكُورًا}

நிச்சயமாக அவர் மிகுந்த நன்றியுள்ள அடியாராக இருந்தார். [அல் குர்ஆன்அல்-இஸ்ரா 17 : 3].

மேலும் தன் உற்ற தோழர் இப்ராஹீம் (அலை) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

{إِنَّ إِبْرَاهِيمَ كَانَ أُمَّةً قَانِتًا لِلَّهِ حَنِيفًا وَلَمْ يَكُ مِنَ الْمُشْرِكِينَ (120) شَاكِرًا لِأَنْعُمِهِ اجْتَبَاهُ وَهَدَاهُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ}

நிச்சயமாக இப்ராஹீம் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவராகவும், நேரிய வழியில் நின்ற தலைவராகவும் இருந்தார்; அவர் இணைவைப்போரில் ஒருவராக இருக்கவில்லை. அவனது அருட்கொடைகளுக்கு நன்றியுள்ளவராக இருந்தார்; அல்லாஹ் அவரைத் தேர்ந்தெடுத்து, நேரான வழியில் செலுத்தினான். [அல் குர்ஆன் அந்-நஹ்ல் 16 : 120-121].

இன்னும் நபி ஸுலைமான் (அலை) அவர்கள் தம்மீது அல்லாஹ்வின் அருட்கொடைகள் தொடர்ந்து வருவதைக் கண்டபோது கூறினார்கள்:

{قَالَ هَذَا مِنْ فَضْلِ رَبِّي لِيَبْلُوَنِي أَأَشْكُرُ أَمْ أَكْفُرُ وَمَنْ شَكَرَ فَإِنَّمَا يَشْكُرُ لِنَفْسِهِ وَمَنْ كَفَرَ فَإِنَّ رَبِّي غَنِيٌّ كَرِيمٌ}

அவர் கூறினார்: "இது என்னுடைய ரப்பிடம் இருந்து வந்த அருளாகும். நான் நன்றி செலுத்துகிறேனா அல்லது நன்றிகெட்டவனாக இருக்கிறேனா என்று என்னைச் சோதிப்பதற்காகவே இது கொடுக்கப்பட்டுள்ளது. எவர் நன்றி செலுத்துகிறாரோ அவர் தமக்கே நன்றி செலுத்திக் கொள்கிறார்; எவர் நன்றிகெட்டவராக இருக்கிறாரோ, நிச்சயமாக என் ரப் தேவைகளற்றவனும் கண்ணியமிக்கவனுமாவான்." [அல் குர்ஆன் அந்-நம்ல் 16 : 40].

இன்னும் நமது நபி முஹம்மத் (ஸல்) அவர்களும் தம் இறைவனுக்குப் பெருமளவில் நன்றி செலுத்துபவராக இருந்தார்கள். அல்-முகீரா இப்னு ஷுஃபா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் தம் கால்கள் வீங்கும் அளவுக்கு நின்று தொழக்கூடியவர்களாக இருந்தார்கள். அப்போது அவர்களிடம், "அல்லாஹ் உங்களின் முன்-பின் பாவங்களை மன்னித்துவிட்டானே, பிறகும் ஏன் இப்படிச் சிரமப்படுகிறீர்கள்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள்:

«أَفَلَا أَكُونُ عَبْدًا شَكُورًا»

நான் மிக நன்றியுள்ள அடியாராக இருக்க வேண்டாமா? என்று பதிலளித்தார்கள். [நூல் : புகாரி 4836, முஸ்லிம்].

**முஸ்லிம்களே!**

நிச்சயமாக அல்லாஹு தஆலா மனிதர்களை நன்றியுள்ளவர்கள், நன்றிகெட்டவர்கள் என இரு வகையாகப் பிரித்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

{إِنَّا هَدَيْنَاهُ السَّبِيلَ إِمَّا شَاكِرًا وَإِمَّا كَفُورًا}

நிச்சயமாக நாம் மனிதனுக்கு வழியைக் காட்டினோம்; அவன் நன்றியுள்ளவனாகவோ அல்லது நன்றிகெட்டவனாகவோ இருக்கிறான். [அல் குர்ஆன் அல்-இன்ஸான் 76 : 3].

மேலும், தன் அடியார்களில் நன்றி செலுத்துபவர்கள் மிகக் குறைவானவர்களே என்றும் அல்லாஹ் கூறுகிறான்:

{وَقَلِيلٌ مِنْ عِبَادِيَ الشَّكُورُ}

என் அடியார்களில் நன்றி செலுத்துபவர்கள் மிகச் சிலரே.[அல் குர்ஆன் ஸபா 34 : 13].

பெரும்பாலான படைப்பினங்கள் அல்லாஹ்வின் வெளிப்படையான மற்றும் மறைமுகமான அருட்கொடைகளில் இருந்து பயன் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இருப்பினும், அவர்களில் நன்றி செலுத்துபவர்களும் இறைவனை நினைவுகூருபவர்களும் மிகக் குறைவே. அருட்கொடை நீங்கி, தண்டனை வரும்போதுதான் அவர்கள் தங்களின் அலட்சியத்திலிருந்து விழித்துக் கொள்கிறார்கள்; தங்களின் மயக்க நிலைக்காக வருந்துகிறார்கள். ஆனால், அப்போது வருந்திப் பயனில்லை.

அல்லாஹ்வின் தவ்ஃபீக் (அருள்) பெற்ற அடியான் என்பவன், எல்லா நேரங்களிலும் தன் மீதுள்ள அல்லாஹ்வின் அருளின் அடையாளத்தைக் காண்பவன் ஆவான். அவனது உள்ளம் இறைவனின் சிறப்பை ஏற்கும்; அவனது நாவால் இறைவனுக்கு நன்றியும் திக்ரும் செய்யும்; அவனது உடல் உறுப்புகள் இறைவனின் கட்டளைக்குக் கட்டுப்படும். அல்லாஹ் கூறுகிறான்:

{وَآتَاكُمْ مِنْ كُلِّ مَا سَأَلْتُمُوهُ وَإِنْ تَعُدُّوا نِعْمَتَ اللَّهِ لَا تُحْصُوهَا إِنَّ الْإِنْسَانَ لَظَلُومٌ كَفَّارٌ}

நீங்கள் கேட்ட எல்லாவற்றிலிருந்தும் அவன் உங்களுக்குக் கொடுத்தான். அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் எண்ணத் தொடங்கினால், உங்களால் அவற்றைக் கணக்கிட முடியாது. நிச்சயமாக மனிதன் பெரும் அநியாயக்காரனும், நன்றிகெட்டவனுமாவான்.[அல் குர்ஆன் இப்ராஹீம் 14 : 34].

**தல்க் இப்னு ஹபீப் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:**

நிச்சயமாக அல்லாஹ்வின் உரிமையானது அடியார்கள் நிறைவேற்ற முடியாத அளவுக்குக் கனமானது. அல்லாஹ்வின் அருட்கொடைகளோ அடியார்கள் கணக்கிட முடியாத அளவுக்கு அதிகமானவை. ஆனால் நீங்கள் காலையிலும் மாலையிலும் தவ்பா (பாவமன்னிப்பு) செய்பவர்களாக இருங்கள்.

**கண்ணியத்திற்குரியவர்களே!**

நிச்சயமாக அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களில் ஒன்று "அஷ்-ஷகூர்" (الشَّكُورُ - நன்றிக்கு நற்கூலி வழங்குபவன்) என்பதாகும். அவன் சிறிய அமல்களுக்கு அதிக கூலியை வழங்குபவன்; அற்பமான செயல்களை ஏற்றுக்கொண்டு, அதற்குப் மகத்தான நன்மைகளைத் தருபவன். ஒரு நன்மையை பத்து மடங்கிலிருந்து எழுநூறு மடங்கு வரையிலும், அதற்கும் மேலாகப் பல மடங்குகளாகவும் ஆக்குகிறான். அல்லாஹ் தன் திருநாமமான "அஷ்-ஷகூர்" என்பதை பெரும்பாலும் "அல்-கஃபூர்" (அதிகம் மன்னிப்பவன்) என்ற திருநாமத்துடன் இணைத்தே கூறுகிறான். அவன் எத்தகைய பாவம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அதை மன்னிப்பவன்; எந்தப் பாவமும் அவனுக்குப் பெரியதல்ல. அதேபோல், எவ்வளவு சிறிய செயலாக இருந்தாலும் அதற்கு நற்கூலி வழங்குபவன். நம்பிக்கையாளனின் நம்பிக்கையைப் பொய்பிக்காதவனும், உழைப்பவனின் உழைப்பை வீணடிக்காதவனுமாகிய அல்லாஹ் தூய்மையானவன்!

**முஸ்லிம்களே!**

ஒரு அடியான் நன்றி செலுத்தும் நிலையை அடைவதற்கான வழிகளில் ஒன்று: பிரார்த்தனை (துஆ) ஆகும். நபி ஸுலைமான் (அலை) அவர்கள் கூறினார்கள்:

{رَبِّ أَوْزِعْنِي أَنْ أَشْكُرَ نِعْمَتَكَ الَّتِي أَنْعَمْتَ عَلَيَّ وَعَلَى وَالِدَيَّ....}

என் ரப்பே! நீ என் மீதும் என் பெற்றோர் மீதும் புரிந்த உனது அருட்கொடைகளுக்கு நான் நன்றி செலுத்த எனக்கு அருள் புரிவாயாக! [அல் குர்ஆன் அந்-நம்ல்16 : 19].

முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனது கையைப் பிடித்து: "யா முஆத்! அல்லாஹ்வின் மீது ஆணையாக, நிச்சயமாக நான் உன்னை நேசிக்கிறேன்; அல்லாஹ்வின் மீது ஆணையாக, நிச்சயமாக நான் உன்னை நேசிக்கிறேன்" என்று கூறினார்கள். பிறகு, "யா முஆத்! ஒவ்வொரு தொழுகையின் பின்பும் இந்தத் துஆவை ஓதுவதை விட்டுவிடாதே என உனக்கு உபதேசம் செய்தார்கள்."

«اللَّهُمَّ أَعِنِّي عَلَى ذِكْرِكَ، وَشُكْرِكَ، وَحُسْنِ عِبَادَتِكَ»

(யா அல்லாஹ்! உன்னை நினைவுகூரவும், உனக்கு நன்றி செலுத்தவும், உன்னை அழகிய முறையில் வணங்கவும் எனக்கு உதவி செய்வாயாக!) [ நூல் : அபூ தாவூத், அல்பானி இதனை ஸஹீஹ் எனக் குறிப்பிட்டுள்ளார்].

அந்த வழிகளில் மற்றொன்று: அல்லாஹ்வின் அருட்கொடைகளை பொருந்திக் கொள்வதும், அவற்றை நினைவுகூர்வதும் ஆகும். அல்லாஹ் கூறுகிறான்:

{وَإِذْ تَأَذَّنَ رَبُّكُمْ لَئِنْ شَكَرْتُمْ لَأَزِيدَنَّكُمْ وَلَئِنْ كَفَرْتُمْ إِنَّ عَذَابِي لَشَدِيدٌ}

நீங்கள் நன்றி செலுத்தினால் உங்களுக்கு நிச்சயமாக அதிகப்படுத்துவேன்; நீங்கள் நன்றிகெட்டவர்களாக இருந்தால் நிச்சயமாக என் தண்டனை மிகவும் கடுமையானது என்று உங்கள் ரப் அறிவித்ததை நினைவுகூருங்கள். [அல் குர்ஆன் இப்ராஹீம் 14 : 7].

நன்றியுடைய உள்ளம் இறைவனின் அருள்களைக் உணர்கிறது. தன் படைப்பாளனின் நன்மையையும் அருளையும் ஒப்புக்கொள்கிறது. அப்போது அது மேலதிக அருளையும் சிறப்பையும் பெறுகிறது. அதனால் தான் முன்னோர்கள் நன்றியுணர்வை "பாதுகாவலன்" (الحَافِظ) என்று அழைத்தனர். ஏனெனில் அது இருக்கும் அருட்கொடைகளைப் பாதுகாக்கிறது; இல்லாத அருட்கொடைகளைக் கொண்டுவருகிறது. மற்றொரு வழி: அருட்கொடைகளை அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்துவதாகும். நன்றியுணர்வின் உண்மைத்தன்மை என்பது அருட்கொடையை அல்லாஹு தஆலா விரும்பும் காரியங்களில் ஈடுபடுத்துவதே ஆகும். முன்னோர்களில் சிலர் கூறினர்: (பாவங்களை விட்டுவிலகுவதே உண்மையான நன்றியுணர்வாகும்). நன்றி செலுத்த உதவும் வழிகளில் ஒன்று: துன்யா (உலக) விஷயங்களில் உங்களை விடக் கீழ்நிலையில் உள்ளவர்களைப் பார்ப்பதாகும். அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

«انْظُرُوا إِلَى مَنْ هُوَ أَسْفَلَ مِنْكُمْ، وَلَا تَنْظُرُوا إِلَى مَنْ هُوَ فَوْقَكُمْ، فَإِنَّهُ أَجْدَرُ أَنْ لَا تَزْدَرُوا نِعْمَةَ اللهِ عَلَيْكُمْ»

உங்களை விடக் கீழ் நிலையில் உள்ளவர்களைப் பாருங்கள்; உங்களை விட உயர் நிலையில் உள்ளவர்களைப் பார்க்காதீர்கள். ஏனெனில் அது உங்கள் மீதுள்ள அல்லாஹ்வின் அருட்கொடையைக் குறைவாகக் கருதாமல் இருக்க மிகவும் ஏற்றதாகும். [நூல் : புகாரி, முஸ்லிம்].

அல்லாஹ் மகத்தான குர்ஆனின் மூலம் எனக்கும் உங்களுக்கும் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் ஞானமிக்க உபதேசங்கள் மூலம் எனக்கும் உங்களுக்கும் பயனளிப்பானாக! எனது இந்த உரையை முடித்து, எனக்காகவும் உங்களுக்காகவும் அனைத்துப் பாவங்களிலிருந்தும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடி அவனிடமே மீள்கிறேன். நீங்களும் அவனிடம் பாவமன்னிப்புத் தேடி மீளுங்கள்; நிச்சயமாக அவன் மிக மன்னிப்பவனும் கருணையுடையவனுமாவான்.

## இரண்டாவது குத்பா

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது; அவனது நன்மைகளுக்காகவும், அவனது தவ்ஃபீக் மற்றும் அருட்கொடைகளுக்காகவும் அவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவனது திருப்தியின் பக்கம் அழைத்த முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் அவர்கள் மீதும், அவர்தம் குடும்பத்தார், தோழர்கள் மற்றும் மறுமை நாள் வரை அவரது வழியைப் பின்பற்றுபவர்கள் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

**இறைத்துதிக்கு பின்பு :**

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சி நடங்கள். ரகசியத்திலும் பகிரங்கத்திலும் அவனைப் பயந்து கொள்ளுங்கள். நீங்கள் அவனிடமே ஒன்று திரட்டப்படுவீர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

**முஸ்லிம்களே!**

அல்லாஹ் நமக்கு அளித்த மகத்தான அருட்கொடைகளில் ஒன்று தண்ணீர் ஆகும். அது எவ்வித சிரமமும் பெரும் செலவுமின்றி நமக்கு வந்து சேர்கிறது. ஆனால், குடிக்க உகந்ததோ இல்லையோ, ஏதோ ஒரு தண்ணீரைக் தேடி நீண்ட தூரம் பயணம் செய்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அல்லாஹ் தன் அடியார்களுக்கு இந்த அருட்கொடையை நினைவூட்டிக் கூறுகிறான்:

**{قُلْ أَرَأَيْتُمْ إِنْ أَصْبَحَ مَاؤُكُمْ غَوْرًا فَمَنْ يَأْتِيكُمْ بِمَاءٍ مَعِينٍ}**

நீங்கள் கூறுங்கள்: "உங்கள் தண்ணீர் பூமிக்குள் உள்வாங்கப்பட்டுவிட்டால், ஓடக்கூடிய தெளிவான தண்ணீரை உங்களுக்குக் கொண்டு வருபவன் யார் என்று சிந்தித்தீர்களா?" [அல் குர்ஆன் அல்-முல்க் 67 : 30].

இந்த அருட்கொடையைச் சரியாகப் பயன்படுத்துவதும், தண்ணீரை வீணாக்காமல் இருப்பதும் முழுமையான நன்றியுணர்வின் அங்கமாகும். நமது தூய மார்க்கம் தர்மம் செய்வதிலும் உளூ (அங்கத்தூய்மை) செய்வதிலும் வீண்விரயம் செய்வதைத் தடுத்துள்ளது. இவை இரண்டும் வணக்கங்களாகும் போது, இவை அல்லாத மற்ற விஷயங்களில் வீண்விரயம் செய்வது எவ்வாறு அனுமதிக்கப்படும்?! அல்லாஹ் கூறுகிறான்:

**{وَالَّذِينَ إِذَا أَنْفَقُوا لَمْ يُسْرِفُوا وَلَمْ يَقْتُرُوا وَكَانَ بَيْنَ ذَٰلِكَ قَوَامًا}**

அவர்கள் செலவு செய்தால் வீண்விரயம் செய்யமாட்டார்கள்; கஞ்சத்தனமும் செய்யமாட்டார்கள்; அதற்கு இடைப்பட்ட நடுநிலையாகவே இருப்பார்கள். [அல் குர்ஆன் அல்-ஃபுர்கான் 25 : 67].

மேலும் அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் உறுப்புகளை மூன்று மூன்று முறை கழுவி உளூ செய்தார்கள். பிறகு:

**«هَكَذَا الْوُضُوءُ، فَمَنْ زَادَ عَلَى هَذَا فَقَدْ أَسَاءَ، وَتَعَدَّى، وَظَلَمَ»**

இதே உளூ செய்யும் முறையாகும். எவர் இதைவிட அதிகமாக்குகிறாரோ அவர் தீமை செய்துவிட்டார், எல்லையைக் கடந்துவிட்டார், அநியாயம் செய்துவிட்டார் என்று கூறினார்கள். [நூல் : அஹ்மத், நஸாயீ, அல்பானி இதனை ஸஹீஹ் எனக் குறிப்பிட்டுள்ளார்].

**இறைநம்பிக்கையாளர்களே!**

சமீபத்திய நூற்றாண்டுகளில் அல்லாஹ் நமக்கு அளித்த மகத்தான அருட்கொடைகளில் ஒன்று மின்சாரம் ஆகும். அதன் மூலம் வீடுகள் வெளிச்சமடைகின்றன, உணவுகள் பாதுகாக்கப்படுகின்றன, வாழ்க்கையின் சக்கரம் சுழல்கிறது, தொடர்பு சாதனங்கள் இயங்குகின்றன, மேலும் கோடைக்காலத்தின் கடும் வெப்பம் மனிதர்களுக்குத் தணிக்கப்படுகிறது. இரவிலோ, பகலிலோ ஒரு மணி நேரம் அது துண்டிக்கப்பட்டாலும், வாழ்க்கையே நின்றுவிட்டது போன்றும் இயக்கம் முடங்கிவிட்டது போன்றும் உணர்கிறீர்கள்.ஒரு அடியான் அருட்கொடைக்கு பழகிவிட்டால், அதைப் பற்றிய உணர்வு குறைகிறது; அது இழக்கப்படும்போதே அதன் மதிப்பை உணர்கிறான். மின் ஆற்றலைப் பொருட்படுத்தாமல் இரவிலும் பகலிலும் அணைக்காமல் விடுவது கண்டிக்கத்தக்க வீண்விரயத்தில் சேரும். முகீரா இப்னு ஷுஃபா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

«إِنَّ اللهَ كَرِهَ لَكُمْ ثَلَاثًا: قِيلَ وَقَالَ، وَإِضَاعَةَ الْمَالِ، وَكَثْرَةَ السُّؤَالِ»

நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மூன்று விஷயங்களை வெறுக்கிறான்: வீண் பேச்சுகள் பேசுவது, செல்வத்தை வீணாக்குவது, அதிகமாகக் கேள்வி கேட்பது (அல்லது யாரிடமும் அதிகமாகக் கேட்பது). [நூல் : புகாரி1477, முஸ்லிம்].

யா அல்லாஹ்! ஈமானை எங்களுக்குப் பிரியமானதாக ஆக்கி, அதை எங்கள் உள்ளங்களில் அழகாக்குவாயாக! குஃப்ர் (இறைநிராகரிப்பு), பாவங்கள் மற்றும் மாறுசெய்வதை எங்களுக்கு வெறுக்கத்தக்கதாக ஆக்கி, எங்களை நேர்வழி பெற்றவர்களில் ஆக்குவாயாக! யா அல்லாஹ்! இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! ஷிர்க்கையும் இணைவைப்பாளர்களையும் தாழ்வுபடுத்துவாயாக! யா அல்லாஹ்! குவைத்தையும் அதன் மக்களையும் அனைத்துத் தீங்குகளிலிருந்தும் சூழ்ச்சிகளிலிருந்தும் பாதுகாப்பாயாக! இந்த நாட்டையும் மற்ற அனைத்து முஸ்லிம் நாடுகளையும் பாதுகாப்பானதாகவும் அமைதியானதாகவும் ஆக்குவாயாக! யா அல்லாஹ்! நாட்டின் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள நமது சகோதரர்களைப் பாதுகாப்பாயாக! அவர்களின் பாதங்களை உறுதியாக்குவாயாக! யா அல்லாஹ்! நமது அமீரையும் அவரது முடிசூட்டு இளவரசரையும் நீ விரும்பும் மற்றும் திருப்தியடையும் காரியங்களுக்குத் தவ்ஃபீக் செய்வாயாக! அவர்களின் கரங்களை நன்மை மற்றும் தக்வாவின் பக்கம் செலுத்துவாயாக! எங்களின் இறுதிப் பிரார்த்தனை: அனைத்துப் புகழும் அகிலங்களின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியது.

(வெள்ளிக்கிழமை மாதிரிப் பிரசங்கத் தயாரிப்புக் குழு)